எனது இலக்கம் :- FE/101/2024
தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
ராஜகிரிய.
2024.10.02

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் ஏனைய நியதிச் சட்ட ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
அனைத்து திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள், மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
அனைத்து கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள் / பொது முகாமையாளர்கள்,

**சனாதித் தேர்தல் - 2024.09.21**
**தேர்தல் பணியாட்குழுவுக்கு செலுத்தல்**

2024.09.24 ஆம் திகதிய PRE/2024/63 ஆம் இலக்க சுற்றறிக்கை மீது கவனத்தை ஈர்க்கச் செய்கின்றேன்.

**02.** மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைப் பிரகாரம் தனது நிரந்தர சேவை நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளை துரிதப்படுத்துவதற்காக தனது நிறுவனத்தில் போதுமானளவு பணி முற்பணம் (Imprest) இல்லையெனில், தேர்தல் பணிகளில் ஈடுபடுகின்ற பணியாட்குழுவின் படிகள் மற்றும் பிரயாணச் செலவுகளுடன் தொடர்புடைய கொடுப்பனவு வவுச்சர்களை துரிதமாகப் பெற்று அவற்றை சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கிணங்க பரீட்சித்து பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்திக்கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 10.1 மற்றும் 10.2 உப பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைகளைப் பூரணப்படுத்தி மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்புவதனூடாக கொடுப்பனவுகளுக்குத் தேவையான பணி முற்பணம் (Imprest) அல்லது நிதி ஒதுக்கீட்டை (Allocation) பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோருகின்றேன்.

**03.** சனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய அனைத்துக் கொடுப்பனவுகளையும் 2024.11.30 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தித் தீர்ப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளமையினால் மேற்குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு கோருகின்றேன்.

கே.எஸ்.பீ.பெரேரா
தலைமை நிதி அலுவலர்
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சார்பாக.